# மலையகப் பல்கலைக்கழகம் கட்டாயம் வேண்டும்!



## அதற்கு முன் மாணவர்கள் பல்கலை செல்வதற்கான கல்விப் பாதையை வெட்டுவோம் என்கின்றார் மனோ

அரச தமிழ்ப் பாடசாலைகளில் கணித, விஞ்ஞான, ஆங்கில, தொழில்நுட்ப ஆசிரியர்கள் போதுமானளவு இருக்கிறார்களா? என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியவை வருமாறு:-

"அரச தமிழ்ப் பாடசாலைகளில் கணித, விஞ்ஞான, ஆங்கில, தொழில்நுட்ப ஆசிரியர்கள் நாட்டில் போதுமானளவு இருக்கிறார்களா? அல்லது இல்லையா? இது இன்று தமிழ் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையா? அல்லது இல்லையா?

நேற்று நாடாளுமன்றத்தில், தமிழ்ப் பாடசாலைகளில், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில்நுட்பம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறை கடுமையாக நிலவுகின்றது என்று சொன்னேன். மலையகப் பல்கலைகழகம் கட்டாயம் வேண்டும். ஆனால், அதற்கு முன் நமது மாணவர் பல்கலை செல்வதற்கான "கல்வி பாதையை" வெட்டுவோம் என்றும் சொன்னேன். அதுதான் மேலே சொன்ன பாட விதானங்களுக்கான விசேட தமிழ் மொழிமூல ஆசிரியர் பயிற்சி கலாசாலை என்றும் சொன்னேன்.

எனது கருத்துகள் சரியா? பிழையா? என தமிழ் பாடசாலை அதிபர்கள் முதலில் பதில் சொல்லட்டும். அதையடுத்து, அரச பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை நம்பி அனுப்பும் அப்பாவி தாய்மார், தந்தைமார் பதில் கூற வேண்டும். கல்வியிலாளர்கள், சமூக உணர்வாளர்கள் பதில் கூறட்டும். எனது நேரடி 0777312770 வாட்சப் எண்ணுக்கு அல்லது எனது நேரடி என்ற மின்னஞ்சலுக்கு பதில்களை அனுப்பட்டும்.

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir
சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 20 புதன்கிழமை 06.12.2023 கதிர் 128

யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
Poo Aadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்

### கோப் குழுவின் தலைவரை நீக்கும் நோக்குடன்

## நாடாளுமன்றத்தை ஒத்திவைக்க ஜனாதிபதி ரணில் ஆலோசனை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கத் திட்டமிட்டுள்ளார் என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் ஜனவரி மாத நடுப்பகுதி அளவில் நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டால் நாடாளுமன்றின் செயற்குழுக்கள் அனைத்தும் இரத்தாகும் என்பதுடன் நாடாளுமன்றம் மீள ஜனாதிபதியால் கூட்டப்பட்டதன் பின்னர் இந்தச் செயற்குழுக்கள் மீண்டும் புதிதாகச் செயற்படத் தொடங்கும்.

ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தை அதிகபட்சமாக இரண்டு மாதங்களுக்கு ஒத்திவைக்க முடியும்.

புதிய நாடாளுமன்ற அமர்வு ஆரம்பமாகும் போது ஜனாதிபதி அக்கிராசன உரையுடன் சம்பிரதாயபூர்வமாக அமர்வை ஆரம்பித்து வைப்பார்.

தற்போது கோப் குழுவின் தலைவராகச் செயற்பட்டு வரும் பேராசிரியர் ரஞ்சித் பண்டார எம்.பியை அந்தப் பதவியில் இருந்து நீக்கும் நோக்கில் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி ஒத்திவைக்கவுள்ளார்

2 ➤




## டெங்கு விழிப்புணர்வு தெருவெளி ஆற்றுகை

அதிகரித்து வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் தெருவெளி நாடகம் இன்று அச்சுவேலியில் நடத்தப்பட்டது.

ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலய மாணவர்களால் மக்கள் மத்தியில் டெங்கு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் குறித்த தெருவெளி நாடகம் அச்சுவேலி பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது டெங்கு நோயை ஏற்படுத்தும் காரணிகள், மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியதன் அவசியம் அத்துடன் யாழ். மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு நோய் தொடர்பான விபரங்களும் அச்சுவேலி பகுதியில் அதிகரித்துள்ள டெங்கு நோய் தொடர்பான விவரங்களும் உள்ளடங்களாக குறித்த தெருவெளி ஆற்றுகை மேற்கொள்ளப்பட்டது. (01)

## நாலக டி சில்வா விடுதலை



2019 ஆம்ஆண்டு இடம்பெற்றது எனக் கூறப்படும் பிரமுகர்களைக் கொலை செய்யும் சதி தொடர்பான வழக்கிலிருந்து முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா கொழும்பு கோட்டை நீதிமன்றத்தால் இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரைக் கொலை செய்வதற்குச் சதி மேற்கொண்டதாக பயங்கரவாத

2 ➤

## பழைய பொருளாதார முறைகளை தொடர்ந்தால் பொருளாதார நெருக்கடியைத் தடுக்க முடியாது!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



பழைய பொருளாதார முறைகளை தொடர்ந்தால், அடுத்த 10 ஆண்டுகளுக்குள் நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதை தடுக்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள தனியார் ஹோட்டலில் இன்று இடம்பெற்ற அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தின் நூற்றாண்டு

2 ➤

## சிவப்புக் கட்டணப் பட்டியல் அனுப்புதல் இலங்கை மின்சாரசபை விசேட அறிவிப்பு

50 இலட்சம் மின் பாவனையாளர்களுக்கு சிவப்புக் கட்டணப் பட்டியலை அனுப்புவது குறித்து ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் இலங்கை மின்சார சபை விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைவாக உரிய கால அவகாசம் வழங்கப் பட்டதன் பின்னரே மின் துண்டிப்பு இடம்பெறும் என மின்சாரசபை தெரிவித்துள்ளது.

50 இலட்சம் மின் பாவனையாளர்களுக்கு சிவப்புக் கட்டணப் பட்டியலை அனுப்புவது குறித்து ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தொடர்பில் இலங்கை மின்சார சபை விசேட அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதற்கமைவாக மின்சாரம் பயன்படுத்திய ஒரு மாதத்தின் பின்னரே மின் கட்டணத்தை செலுத்த வேண்டும் என்றும், பெரும்பாலான நுகர்வோர்கள் உரிய நேரத்தில் மின் கட்டணத்தை

2 ➤

## தெல்லிப்பழை வாள்வெட்டுச் சம்பவம் இரண்டு சந்தேக நபர்கள் கைதாகினர்

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேகநபர்கள் பயணித்த ஹயஸ் வாகனமும் புதுக்குடியிருப்பு பகுதியில் வைத்து மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை மாலை 5.30 மணியளவில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்கு அருகில் ஹயஸ் வாகனத்தில் வந்த இனந்தெரியாத குழு ஒன்று மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் மீது சரமாரியாக வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இதனையடுத்து, வன்முறை கும்பல் ஹயஸ் வாகனத்தில் மருதனார்மடம் நோக்கி தப்பிச் செல்லும் போது துரத்தி சென்ற பொலிஸார் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் அருகில் உள்ள வீதியில் இருந்து வாள்கள் மற்றும் துப்பாக்கி ரவைகள் என்பவற்றை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளனர்.

வாள்வெட்டில் காயமடைந்த 28 வயதான இளைஞர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

2 ➤

# மாற்றுத்திறனாளிகளுக்கு தனிப்பட்ட நுழைவு வசதிகள் எதுவும் இல்லாத அரச கட்டடங்கள்

## தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவிப்பு

இலங்கையிலுள்ள 106 அரச நிறுவனங்கள் தொழிற்படும் 617 அலுவலகக் கட்டடங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட நுழைவு வசதிகள் எதுவும் இல்லை என தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவல்களின்படி, இலங்கையில் உள்ள 142 அரச நிறுவனங்களுள் 106 நிறுவனங்களின் அலுவலகங்களாகப் பயன்படுத்தப்படும் கட்டடங்களின் எண்ணிக்கை 754 ஆகும். இதில் மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட நுழைவு வசதிகள் எதுவும் இல்லாமல் பராமரிக்கப்படும் அலுவலகங்களின் எண்ணிக்கை 617 ஆகும்.

மேலும், 40 களஞ்சியசாலைகள், 11 பயிற்சி நிலையங்கள், 04 காட்சியறைகள் மற்றும் வேறு தேவைகளுக்கான 82 கூடங்கள் ஆகியன மாற்றுத்திறனாளிகளுக்கான நுழைவு வசதிகள் இன்றி காணப்படுவதாக கணக்காய்வு மூலம் தெரியவந்துள்ளது. இதேவேளை, 52 அரச நிறுவனங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கான தனிப்பட்ட நுழைவு வசதி இல்லாத நிலையில் குத்தகை அடிப்படையில் 325 கட்டடங்களை பயன்படுத்தி வருகின்றன எனவும் தெரியவந்துள்ளது.

இவற்றிற்கான மாத வாடகையாக ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் செலுத்தப்பட்டுள்ளது. இங்குள்ள கட்டடங்களில் தனியாரிடம் குத்தகை அடிப்படையில் பெறப்பட்ட கட்டடங்களின் எண்ணிக்கை 245 ஆகும், அவற்றிற்காக நான்கு கோடி ரூபாய்கும் மேல் மாத வாடகையாக செலுத்தப்பட்டிருப்பதும் கணக்காய்வு அறிக்கையில் தெரியவந்துள்ளது. (ரெதி-03)

## மூன்றரை வயதுச் சிறுவன் பரிதாபகரமாக உயிரிழப்பு

வவுனியா, நெடுங்கேணி பிரதேசத்தில் வீட்டில் உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சிக்குண்ட சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

அந்தச் சிறுவன் யாழ்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார். நெடுங்கேணி, பனையாண்டானைச் சேர்ந்த மூன்றரை வயதுடைய சிவலோகநாதன் விந்துஜன் என்ற சிறுவன் கடந்த மாதம் 21ஆம் திகதி உழவு இயந்திரத்தின் கலப்பைக்குள் சென்று சிக்குப்பட்டு படுகாயமடைந்திருந்தார்.

அவர் அருகில் உள்ள வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதான வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையிலே நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார். (அ)

## தெல்லிப்பழை வாள்வெட்டுச் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்நிலையில் தப்பியோடிய வன்முறைக் கும்பலைச் சேர்ந்தவர்களை கைது செய்ய யாழ்ப்பாண பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவினர், காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவினர் மற்றும் தெல்லிப்பழை பொலிஸார் ஆகியோர் தீவிர விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், வாள்வெட்டுக்கு இலக்கானவரின் வாக்குமூலத்தை அடிப்படையாக கொண்டு கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. (த)

## சிவப்புக் கட்டணப் பட்டியல் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்துகின்றார்கள் என்றும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழமையாக ஒரு மாதத்திற்கான கட்டணம் செலுவுத்த தவறியதன் பின்னர் சிவப்பு பட்டியல் வழங்கப்படும் என்றும், சிவப்பு பட்டியல் வழங்கப்பட்ட பின்னர் 10 நாட்கள் அவகாசம் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ள மின்சார சபை அதன்பின்னரே மின்சாரம் துண்டிக்கப்படும் எனத் தெரிவித்துள்ளது.

எனினும், 2023ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் 5 இலட்சத்து 44 ஆயிரத்து 488 மின்வெட்டு மற்றும் மின் இணைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை மின்சார சபை வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சராசரியாக ஒரு வருடத்திற்கு சுமார் 1 இலட்சத்து 50 ஆயிரம் புதிய வாடிக்கையாளர்கள் புதிய மின் இணைப்புகளைப் பெறுவதாகவும், இதனால் 2019 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் 5 இலட்சத்து 44 ஆயிரத்து 488 மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் மின்சார சபை மேலும் குறிப்பிடுகிறது.

இலங்கை மின்சார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட இ-பில் முறையின் படி சிவப்பு கட்டணங்கள் வழங்குவது படிப்படியாக குறைக்கப்பட்டு வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மிக விரைவில் வாடிக்கையாளர்களுக்கு குறுஞ்செய்தி மூலம் நிலுவைத் தொகை அறிவிக்கப்படும் எனவும் சபை சுட்டிக்காட்டியுள்ளது. (04)

## நாலக டி சில்வா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைப் பிரிவின் முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வா மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், குறித்த குற்றச்சாட்டில் அவருக்கு எதிரான சாட்சியங்கள் போதுமானதல்ல என்று சட்டமா அதிபர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளார்.

இதனையடுத்து, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக டி சில்வாவை குறித்து வழக்கிலிருந்து விடுதலை செய்யுமாறு கோட்டை நீதிவான் திலின கமகே உத்தரவிட்டுள்ளார். (அ)

## பழைய பொருளாதார ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விழாவில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதில் அரச அதிகாரிகளும், முழு நாட்டு மக்களும் பெரும் தியாகங்களைச் செய்தனர். அதற்காக நாம் அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். இம்மாத நடுப்பகுதியில், நாடு வங்குரோத்து நிலையில் இருந்து மீண்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் அறிவிக்க உள்ளது.

ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த புதிய பொருளாதார முறைகளின்படி முன்னேற வேண்டும். அப்படி இல்லாமல், பழைய பொருளாதார முறைகளை அமுல்படுத்தினால், அடுத்த 10 ஆண்டுகளுக்குள் நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதை தடுக்க முடியாது.

மத்திய வங்கி ஏற்கனவே பணம் அச்சிடுவதை நிறுத்திவிட்டது. அபிவிருத்திக்காக அரச வங்கிகளில் இருந்து கடன் பெறுவதும் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த நிபந்தனைகள் இல்லாமல் பொருளாதார முன்னேற்றத்தை எட்ட முடியாது.

இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையிலான இடைவெளி மற்றும் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

எனவே, ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும், அரசின் செலவினங்களை குறைக்கவும், அரசின் வருவாயை அதிகரிக்கவும் புதிய திட்டங்களை தயாரித்துள்ளோம், எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (04)

## நாடாளுமன்றத்தை ஒத்திவைக்க ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏனெனில் கோப் குழுவின் தலைவர் இலங்கை கிரிக்கெட் விவகாரத்தில் விசாரணை நடத்தி வருகின்றார்.

கிரிக்கெட் நிறுவனத்தின் திட்டமொன்றின் ஆலோசகராகப் பேராசிரியர் ரஞ்சித் பண்டார எம்.பி. கடமையாற்றி வருகின்றார்.

எனவே, நிறுவனத்தின் சார்பில் பணியாற்றி வரும் ஒருவர் அந்த நிறுவனம் தொடர்பில் விசாரணை நடத்துவது பொருத்தமாகாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதன் அடிப்படையில் ரஞ்சித் பண்டாரவை கோப் குழு தலைமைப் பதவியிலிருந்து நீக்கும் வகையில் ஜனாதிபதி நாடாளுமன்றத்தை ஒத்திவைக்கவுள்ளார் என்று அறியமுடிகின்றது. (அ)

## மலையகப் பல்கலைக்கழகம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாவிட்டால், நான் சொல்வதை எல்லாமே எதிர்த்து கட்சி அரசியல் செய்கின்ற, கல்வியை பற்றி எந்தவித தூரப்பார்வையும் இல்லாத அரசியல்வாதிகள் கையில், தமிழ் பிள்ளைகளின் கல்வியை ஒப்படைத்து விட்டு, தந்தை செல்வா சொன்னது போல், “கடவுள் காப்பாற்றுவார்” என ஒதுங்க வேண்டும்.

மலையகம் என்றால், “மலைகளை” மட்டும் தேடி ஓடாதீர்கள். கொழும்பின் அரசாங்க பாடசாலைகளில் படிக்கும் மாணவர்கள் பெரும்பாலும், இங்கு வந்து தொழில் நிமித்தம் குடியேறியுள்ள பாமர மலையக மக்களின் பிள்ளைகள்தான் என்றும் கூறினேன். அதேபோல் கிளிநொச்சி, வன்னி, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் இருந்தும் தொழில் நிமித்தம் குடியேறியுள்ள பிள்ளைகளுதான் கொழும்பின் அரசாங்க பாடசாலைகளில் மாணவர்கள்.

எனது நோக்கம், இதுதான். தமிழ் மொழிமூல, இரசாயனம், பௌதிகம், உயிரியல், புவியல், அரசறிவியல், கணக்கீடு, வணிகவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுக்கான ஆசிரியர்களை விசேட பயிற்சி அளிக்கும் ஆசிரிய பயிற்ச்சி கலாசாலை அமைய வேண்டும். அவர்களை, கொழும்பு, களுத்துறை, கேகாலை, இரத்தினபுரி, கண்டி, மாத்தளை, பதுளை, கம்பஹா, மொனராகலை, குருநாகலை, புத்தளம், காலி, மாத்தறை ஆகிய மாவட்ட தமிழ் பாடசாலைகளில் ஆசிரியர்களாக நியமிக்க வேண்டும் என்பதாகும். அவசியப்படும் வன்னி, கிழக்கு மாகாண பாடசாலைகளிலும் நியமிக்க வேண்டும்.

நியமிக்கப்படுபவர்கள் குறைந்த பட்சம் பத்து வருடங்கள் அதே பாடசாலையில் பணி செய்ய வேண்டும். தவிர்க்கமுடியாத இடமாற்றம் வேண்டுமென்றாலும்கூட, அதே பாடத்துக்கான மாற்று ஆசிரியர் கிடைத்தே பிறகே இடமாறி செல்ல வேண்டும்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை நோக்கி நேற்று நாடாளுமன்றத்தில், தயவு செய்து பாரத பிரதமர் மோடி, மலையக மக்கள் நல்வாழ்வுக்காக தருவதாக உறுதியளித்துள்ள, இலங்கை ரூபா.300 கோடிக்கும் குறையாத நிதியை “தமிழ் மொழிமூல” ஆசிரியர் பயிற்சிக்கான விசேட ஆசிரியர் பயிற்சி கலாசாலை அமைக்க பயன்படுத்துங்கள் என்றும் சொன்னேன். மலையக பல்கலைக்கழகம் அதையடுத்து வரட்டும். வேண்டாம் என்று சொல்லவில்லை. அதற்கு இப்போது அவசரப்பட வேண்டாம் என்றுதான் சொன்னேன்.

இந்த வருடம், 2023 ஜனவரி மாதமே இதுபற்றி நான் இலங்கையில் உள்ள இந்திய தூதுவர் கோபால் பாகலே உடன் நான் உரையாடியுள்ளேன். எமக்கான விசேட ஆசிரியர் பயிற்சி கலாசாலையும், எமது பெண்களுக்கான விசேட தாதியர் பயிற்சி கல்லூரியும் அமைத்து கொடுங்கள் என எழுத்து மூலம் கோரிக்கை விடுத்தேன். அதற்கான நிதியை பாரத பிரதமர் நரேந்திர மோடியிடம் கேட்டு பெற்று தாருங்கள் எனக் கூறினேன்.

இலங்கை அரசின் திட்டங்கள் மலையக மக்கள் தொடர்பில் நடக்கட்டும். ஆனால், பாரத பிரதமர் நரேந்திர மோடி வழங்கும் நிதியை, இலங்கையில் உள்ள இந்திய தூதரகமும், இலங்கை அரசின் கல்வி அமைச்சும் இணைந்து பயன்படுத்த வேண்டும். இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தில் உள்ள “இலங்கை தோட்ட தொழிலாளர் கல்வி அறக்கட்டளையை, மீண் டும் புதுபித்து, அதன் நோக்கங்களை விரிவிபடுதி இதை செய்து தாருங்கள்” என நேற்றுக்கூட நான் நாடாளுமன்றத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவை நோக்கி சிங்கள மொழியிலும், ஆங்கில மொழியிலும் கூறினேன்.

நான் கூறிய விடயங்களை புரிந்துக்கொள்ள முடியாத தமிழ் எம்.பிக்களை பற்றி எனக்கு அக்கறை இல்லை. ஆனால், அரச பாடசாலைகளுக்கு தம் பிள்ளைகளை நம்பி அனுப்பும் அப்பாவி பெற்றோருக்குப் புரியும் என நினைக்கிறேன். தமிழ் பாடசாலை அதிபர்களுக்கும் புரியும் என நம்புகிறேன்.” - என்றார். (அ)

**விற்பனையாளர் தேவை**

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

**உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட**
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
**காலைக்கதிர் TV YouTube தளம்**

# பெண்கள், சிறுவர்கள் மீது இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான வேலைத் திட்டம்





(ஹஸ்பர்)

பெண்கள் சிறுவர்கள் மீது இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான முன்னாயத்த பரிந்துரைப்பு வேலைத் திட்டமும் விழிப்புணர்வூட்டும் நிகழ்வுகளும் கிழக்கு மாகாணம் தழுவிய ரீதியில் இடம்பெற்று வருவதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் சாமிந்த ஹெட்டியாராச்சி தலைமையில் இன்று குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், திருகோணமலை பெண்கள் சிறுவர் பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி எம். நளினி, திருகோணமலை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி அலுவலர் சுவர்ணா தீபானி, பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு பொறுப்பதிகாரி எம். றபீக், உட்பட மாவட்ட, பிரதேச செயலகங்களின் மகளிர் அபிவிருத்தி அலுவலர்கள், செயற்பாட்டாளர்கள், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அலுவலர்கள் ஆகியோர்கள் இந்த நிகழ்வுகளில் இணைந்து கொண்டனர்.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக வன்முறைகள், இம்சைகள் வெறுப்புணர்வூட்டக் கூடிய சம்பவங்கள் இடம்பெறும்பொழுது அதுபற்றி பொதுமக்கள் உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தும் இலகு வழிமுறையிலமைந்த அவசர தொலைபேசி இலக்கங்கள் கொண்ட சுவரொட்டிகள் மக்கள் கூடும் பொது இடங்களிலும் பொதுப் போக்குவரத்து மற்றும் தனியார் போக்குவரத்து பஸ்களிலும் புகையிரத நிலையத்திலும் பொதுமக்கள் பார்வைக்கு ஒட்டப்பட்டன.

"வன்முறைகளற்ற வாழ்வைக் கொண்டாடுவோம், வன்முறைகளற்ற வீடுகளையும் சமூகத்தையும் உருவாக்குவோம், பொது இடங்களில் ஏற்படும் பாலியல் தொந்தரவுகளை பகிரங்கமாக வெளிப்படுத்துவது பாதிக்கப்பட்டோரின் உரிமை, பெண்களையும் சிறுமிகளையும் பாதுகாத்து அவர்களுக்கெதிரான வன்முறைகளை இல்லாதொழிக்க அனைவரும் ஒன்றிணைவோம்" ஆகிய தொனிப் பொருள்களில் அமைந்த அவசர முறைப்பாட்டு இலங்கங்கள் பொறிக்கப்பட்ட சுவரொட்டிகள் பரவலாக பொது இடங்களில் ஒட்டப்பட்டன.

அத்துடன், பெண்கள் சிறுவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இடம்பெறும் துன்புறுத்தல்கள், வன்முறைகள், துஷ்பிரயோகங்கள், கடத்தல்கள், கொடுமைப்படுத்தல்கள், சித்திரவதைகள், சுரண்டல்கள், மனித உரிமை மீறல்கள், இளவயதுத் திருமணம், பாதுகாப்பின்றியும் பராமரிப்பின்றியும் கைவிடல் உள்ளிட்ட பல்வகைப் பாதிப்புக்கள் இடம்பெற்றால் அவற்றைத் தடுப்பதற்கும் பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாப்பதற்கும் ஏற்ற வகையில் உதவிக்கு அழைக்கக் கூடிய விவர இலக்கங்களைக் கொண்ட பெரிய காட்சிப் படுத்தல் பதாதைகளும் பொது இடங்களில் நிறுவப்பட்டன.

அவற்றில் பிரதேசந மட்ட சட்ட உதவி ஆணைக் குழு, மனித உரிமை ஆணைக்குழு, மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், வைத்தியசாலை உள்ளிட்ட 16 பிரிவுகளின் அவசர உதவி அழைப்பிலக்கங்கள் குறிக்கப்பட்டுள்ளன.

மாவட்ட செயலகத்தின் ஒத்துழைப்புடன் சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம் இச்செயல் திட்டத்தை அமுல்படுத்துகிறது.

# காரைதீவிலிருந்து கல்முனை வரை பெண்கள் பேரணி!

## அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் 16 நாள் செயற்பாட்டு வார நிகழ்வில் இன்று முன்னெடுப்பு



(வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் 16 நாள் செயற்பாட்டு வாதத்தின் ஓரங்கமாக இன்று புதன்கிழமை காரைதீவில் இருந்து கல்முனை வரை பெண்கள் பேரணி இடம் பெற்றது.

அம்பாறை மாவட்ட பெண்கள் வலை அமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரனின் ஏற்பாட்டில் தலைவி திருமதி தியாகேஸ்வரி ரூபன் தலைமையில் பேரணி காலை 8.30 மணியளவில் ஆரம்பமானது.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசனும், அம்பாறை மாவட்ட செயலகங்களில் கடமையாற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பெண்கள் அமைப்பு உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள்.

இன்று காலை காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமான இந்த பேரணியில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மகளிர் மாவட்டம் எங்குமிருந்து வந்து கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வீட்டு வன்முறையை இல்லாது ஒழிப்போம், சிறுவர் உரிமையை பாதுகாப்போம், பெண்கள் உரிமையை பாதுகாப்போம், பெண்கள் சிறுவர்கள் வன்முறைக்கு எதிராக குரல் கொடுப்போம், ஆண் பெண் சமத்துவம் பேணுவோம், பணிப் பெண்களாக வெளிநாடு செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம், வேலைக்கு செல்லும் பெண்களின் பாதுகாப்பில் கவனம் செலுத்துவோம், பேருந்துகளில் செல்லும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவோம், போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை இந்த ஊர்வலத்தில் சென்றோர் கொண்டு சென்றனர் .

இவர்கள் பிரதான வீதி ஊடாக கல்முனையை சென்றடைந்து கல்முனை பிரதான மத்திய பஸ் தரிப்பு நிலையத்தில் பெண்கள் சிறுவர் உரிமை தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகத்தையும் நடத்தினர்.



# புத்தகச் சேமிப்பிடத்துக்குள் வெள்ள நீர் புகுந்தது 20 லட்சம் ரூபா மதிப்புள்ள புத்தகங்கள் சேதம்!

## எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் வேதனை



தனது தேசாந்திரி பதிப்பகத்தின் சேமிப்பிடத்துக்குள் வெள்ளநீர் புகுந்ததால் ரூபா.20 லட்சம் மதிப்புள்ள புத்தகங்கள் சேதமானதாக எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் வேதனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தனது பேஸ்புக் பதிவில், புத்தகங்களை இழந்தோம். கடும் புயல்மழையால் எங்கள் பதிப்பகத்தின் குடோனுக்குள் தண்ணீர் புகுந்துவிட்டது. காலை ஐந்து மணி முதல் புத்தகங்களை வேறு இடத் திற்கு மாற்றும் முயற்சியில் ஈடுபட்டோம். கடும் மழையின் காரணமாக வாகனம் எதுவும் கிடைக்கவில்லை. தண்ணீர் சரசரவென உயர்ந்து கொண்டே போனது. புத்தகங்களை இடம் மாற்ற இயலவில்லை.

ஏராளமான புத்தகங்கள் நனைந்து வீணாகிப்போகின. கண்ணீரோடு அவற்றைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இந்த இழப்பு எங்களுக்கு பெரியது. இருபது லட்ச ரூபாய்க்கும் மேலான புத்தகங்கள் சேதமாகியிருக்கக் கூடும். மீதமுள்ள புத்தகங்களைக் காப்பாற்றி கொண்டு வந்து வீடு முழுவதும் நிரப்பியிருக்கிறோம்.

நேற்று முழுவதும் வீட்டிற்குள்ளும் தண்ணீர் வரும் நிலை. இரண்டு படிகள் தண்ணீரில் மூழ்கிவிட்டன. மின்சாரம் இல்லை. இணையத் தொடர்பில்லை. எவரையும் உதவி கேட்டு தொடர்பு கொள்ள முடியவில்லை. ஆயினும், அருகிலுள்ள நண்பர்கள் ஓடியோடி வந்து புத்தகங்களைக் காப்பாற்ற உறுதுணை செய்தார்கள்.

மழை நின்றபின்பும் இன்றும் மின்சாரமில்லை. வீட்டைச்சுற்றிலும் தண்ணீர் தேங்கி நிற்கிறது. கண்முன்னே புத்தகங்களை இழப்பதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. இத்தனை ஆண்டுகாலம் எழுதிச் சம்பாதித்த பணத்தைக் கொண்டும் வங்கி கடன் உதவியாலும் தான் தேசாந்திரி பதிப்பகம் துவங்கினோம். உங்கள் ஆதரவால் வெற்றிகரமாகவே நடத்தினோம். ஆனால், நேற்றைய மழை எங்களை வேரோடு சாய்த்து விட்டது.

புத்தகக் குடோனுக்கு இன்சூரன்ஸ் செய்திருந்தோம். ஆனால், இயற்கை பேரிடர்களுக்கு இன்சூரன்ஸ் கிடையாது என்று கைவிரித்துவிட்டார்கள். இப்போது என்ன செய்வது என்று தெரியாத நிலை. நெருக்கடியான சூழலில் ஈரமான புத்தகங்களுக்கு நடுவே கண் கலங்கி அமர்ந்திருக்கிறேன். எனக்குத் தெரிந்த உலகம் புத்தகங்களும் வாசகர்களும் மட்டும் தான். அவர்கள் மீண்டும் என்னை மீட்பார்கள் என்ற நம்பிக்கையோடு..., என்று எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணன் வேதனையுடன் பகிர்ந்துள்ளார். (04)

## காஸாவில் தீவிரத் தரைவழித் தாக்குதல் அதிமுனைப்பைக் காட்டுகிறது இஸ்ரேல்!

காஸாவில் இஸ்ரேலின் தாக்குதல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. கடுமையான குண்டுவீச்சு மற்றும் தரைவழித் தாக்குதலின் விளைவாக காயமுற்ற மற்றும் பலியான பாலஸ்தீனர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கான் யூனிஸ் நகரத்தின் மையத்தில் இஸ்ரேல் ராணுவத்தினர் இருப்பதாகவும் தரைவழி தாக்குதலைத் தெற்கு நோக்கி விரிவுப்படுத்தவுள்ளதாகவும் இஸ்ரேல் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ராணுவ அதிகாரிகள், போர் தொடங்கியது முதல் அதிதீவிரமான நாளொன்றை இப்போது எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளார்கள்.

தெற்கு நோக்கிய இஸ்ரேலின் தாக்குதல் மிகப்பெரிய அளவிலான மனித இடப்பெயர்வுக்கு வழிவகுக்கும் என ஐநா எச்சரித்துள்ளது. ஏறத்தாழ 18.7 லட்சம் மக்கள் தங்கள் வீடுகளை விட்டு இடப்பெயர்ந்துள்ள நிலையில் ஏற்கெனவே குறைவாகக் கிடைக்கும் உணவு, குடிநீர் மற்றும் மருத்துவ வசதி பகிர்மானத்தை இந்தத் தாக்குதல் மேலும் பாதிக்கும் என .சபை எச்சரித்துள்ளது.

பாலஸ்தீனர்கள் தஞ்சம் அடைந்துள்ள பகுதிகள் உள்பட காஸா முழுவதும் குண்டுவீச்சு கடுமையாக்கப்பட்டுள்ளது.

பலியான பாலஸ்தீனர்கள் எண்ணிக்கை 16,200 எனவும் காயமுற்றோர் எண்ணிக்கை 42 ஆயிரத்துக்கு அதிகமாக உள்ளது எனவும் காஸா சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு, போர் நிறைவுற்ற பிறகு காஸாவின் பாதுகாப்பு கட்டுப்பாடு இஸ்ரேலிடம்தான் இருக்கும் எனக் குறிப்பிட்டது, மறைமுகமாக காஸாவை மீண்டும் இஸ்ரேல் ஆக்கிரமிக்கும் திட்டத்தின் வெளிப்பாடுதான் எனக் கருதப்படுகிறது.

கான் யூனிஸ் நகரத் தாக்குதலுக்குப் பிறகு தெய்ர் அல்-பலா நகரத்தை நோக்கி இஸ்ரேல் ராணுவம் முன்னேறி வருகிறது. 150 க்கும் அதிகமான யுத்த டாக்கிகளும் கவச உடை அணிந்த காவலர்கள் வாகனமும் அந்த வழியில் பயணிப்பதை செயற்கை கோள் படங்கள் மூலமாக அறிய முடிகிறது.

தரைவழித் தாக்குதலின் மூன்றாவது கட்டத்தில் இருக்கும் இஸ்ரேல் வான்வழியிலும் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக ஐ.நா. மனிதநேய விவகார அலுவலகம் தெரிவித்துள்ளது. (04)

## காரினால் புறாவைக் கொல்ல முயற்சி டோக்கியோவில் ஓட்டுநர் ஒருவர் கைது!




ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஓட்டுநர் ஒருவர் காரைப் பயன்படுத்தி புறாவைக் கொல்ல முயற்சி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

50 வயதான கார் ஓட்டுநர் அட்சுஷி ஓசாவா, காரில் புறா கூட்டத்தைத் துரத்த முயற்சி செய்துள்ளார். அதிர்ச்சியில் புறா ஒன்று உயிரிழந்துள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

வன உயிரிகள் பாதுகாப்பு சட்டத்தின்படி கைது செய்யப்பட்டவர், சாலைகள் மக்களுக்கானவை. கார் வருவதைக் கவனிக்க வேண்டியது புறாக்கள்தான் எனத் தெரிவித்துள்ளார்.

வரையறைக்குட்பட்ட எண்ணிக்கையில் வேட்டையின புறாக்களைக் கொல்ல ஜப்பானில் அனுமதி உண்டு. மக்களின் வேளாண், வாழ்வாதார பொருள்களுக்குப் புறாக்களால் பாதிப்பு ஏற்பட்டால் உள்ளூர் அதிகாரிகளின் ஒப்புதலுடன் புறாக்களைக் கொல்லலாம். ஆனால் பொதுவகை புறாக்களை அங்குக் கொல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் டக்ஸி ஓட்டுநரான அட்சுஷி, சாலையில் இருந்த புறாக்கள் மீது ஏற்றும் நோக்குடன் போக்குவரத்து விளக்குகளில் பச்சை எரிந்தவுடன் காரை வேகமாக செலுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவத்தைப் பாதசாரி ஒருவர் கவனித்துள்ளார். தொழில்முறை ஓட்டுநரான இவரது இந்த செயல் தீங்கிழைக்கும் நோக்கம் கொண்டது எனக் காவலர்கள் தெரிவித்துள்ளனர்.

புறாக்களின் மீதான டோக்கியோவின் இந்தக் கருணை, காகங்கள் விஷயத்தில் மாறானது. தலைநகர் வீதிகளில் ஹோட்டல்களில் இருந்து கொட்டப்படும் மீந்த உணவுப் பொருள்களால் காகங்கள் பெருகுவதாகவும் அதனால் மக்கள் பாதிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்தன.

2001 இல் அப்போதைய ஆளுநர் 30,000 காகங்கள் மீதான போரை அறிவித்தார். இருபது வருடங்களுக்குப் பிறகு தலைநகரில் உள்ள காகங்களின் எண்ணிக்கை 3 இல் 2 பங்கு குறைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

## நைஜீரியாவில் ட்ரோன்கள் மூலம் தவறுதலான தாக்குதல் 85 பேர் உயிரிழந்துள்ளதாக அதிர்ச்சித் தகவல் வெளியானது!



நைஜீரியாவில் ஆளில்லா விமானம் (ட்ரோன்) மூலம் ராணுவம் தவறுதலாக நடத்திய தாக்குதலில் 85 பேர் உயிரிழந்தனர்.

பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக மத நிகழ்ச்சியொன்றில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்த அந்த நாட்டு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இது குறித்து அதிகாரிகள் தரப்பிலிருந்து வெளியாகியுள்ள தகவல்களின் படி, கடுனா மாகாணத்திலுள்ள ஒரு கிராமத்தில் இஸ்லாமிய மத நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

அப்போது 'பயங்கரவாதிகள் மற்றும் ஆயுதக் குழுவினரை' குறிவைத்து அந்த நிகழ்ச்சி நடைபெற்ற பகுதியில் ட்ரோன் மூலம் ராணுவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 'தவறுதலாக' தாக்குதல் நடத்தியது.

இதில் பொதுமக்கள் 85 பேர் உயிரிழந்தனர். 66 பேர் காயமடைந்தனர் என்று தெரியவந்துள்ளது.

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் பயங்கரவாதிகள் மற்றும் ஆயுதக் குழுக்களால் அந்த நாட்டின் வடக்குப் பிராந்தியத்தில் பாதுகாப்பு நெருக்கடி நிலவி வருகிறது.

அந்த அமைப்புகளை எதிர்கொள்ள ராணுவம் வான்வழித் தாக்குதல் உத்தியை அளவுக்கு அதிகமாகக் கையாண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

அப்போது ராணுவம் தவறுதலாக நடத்தும் தாக்குதல்களில் ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்து வருவது மனித உரிமை அமைப்புகளைக் கவலையடையச் செய்துள்ளது.

கடந்த 2017 ஆம் ஆண்டிலிருந்து இந்த வகைத் தாக்குதல்களில் இதுவரை பொதுமக்கள் சுமார் 400 பேர் உயிரிழந்துள்ளனர்.

பயங்கவாத எதிர்ப்பு நடவடிக்கையின்போது, பொதுமக்கள் உயிரிழப்புகளைத் தவிர்ப்பதற்காக நைஜீரிய ராணுவம் போதிய நெறிமுறைகளை உருவாக்கவில்லை விளைவுகளைப் பொருள்படுத்தாமல் தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

குறிப்பாக, நைஜீரிய ராணுவத்துக்கு தாராளமாகக் கிடைத்து வரும் ட்ரோன்களை யார், எப்போது, எந்தச் சூழல்களில் இயக்குவது என்று என்ற உறுதியான வரையறைகள் வகுக்கப்படவில்லை எனவும், இது மிகவும் ஆபத்தானது எனவும் பாதுகாப்பு ஆய்வு அமைப்புகள் கூறி வருகின்றன.

இந்தச் சூழலில், கடுனா மாகாணத்தில் தற்போது நடைபெற்றுள்ள ட்ரோன் தாக்குதலில் 85 பேர் உயிரிழந்திருப்பது அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணை நடத்த அதிபர் போலா டினுபு உத்தரவிட்டுள்ளார். ஆனால், இது போன்ற விசாரணைகள் ரகசியமாக நடைபெறுவதால் தவறுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு என்றே கூறப்படுகிறது. (04)

# கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் கடேட் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்





(நூருல் ஹுதா உமர்)

கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலையின் கடேட் மாணவர்கள், தேசிய மாணவ சிப்பாய்கள் படையணி ரன்தம்பே பயிற்சி நிலையத்தில் கணிப்பீட்டு முகாமில் பங்கு பற்றியமைக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு பாடசாலையின் காரியப்பர் மண்டபத்தில் மேஜர். கே.ம். தமீம் அவர்களின் வழிகாட்டலிலும் தலைமையிலும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஹானி நிறுவனத்தின் பணிப்பாளர், பொறியியலாளர் ஏ.எம். சித்தீக் பரீட் கலந்து கொண்டதுடன் கௌரவ அதிதியாக பாடசாலையின் அதிபர் எம். ஐ. ஜாபிர் அவர்களும் விசேட அதிதிகளாக கல்லூரியின் பிரதி அதிபர் எ.எச்.எம். அமீன், எ.எல்.எம். தன்ஸீல், கல்லூரியின் அபிவிருத்தி நிறைவேற்று குழுவின் செயலாளர் டாக்டர். எம்.எச்.கே. ஷனூஸ், 17 வது படைப்பிரிவின் பயிற்சி அதிகாரி கேப்டன். எம்.டி.நௌஷாத், 38வது படைப்பிரிவின் அதிகாரி 2ம் லெப்.. எம். எம். ஹாசிக், பாடசாலையின் விளையாட்டு பொறுப்பாசிரியர் எம்.ஐ.எம். அமீர், ஒழுக்காற்று சபையின் பொறுப்பாசிரியர் யு.எல்.எம். இப்ராஹிம், பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் யூ.எல்.எம்.ஹிலால், பாடசாலையின் பழைய கடேட் மாணவ சங்கத்தின் தலைவர் எஸ். ஏ. முஹம்மட் அஸ்லம் அதன் பிரதிநிதிகள், பகுதித் தலைவர்கள், பெற்றார்கள் என பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின்போது மாணவர்கள் எவ்வாறான பயிற்சிகளை, எவ்வாறான சவால்களை முகம் கொடுத்தார்கள் போன்ற பல்வேறு விடயங்கள் வீடியோ காட்சியாக பெற்றோர்களிடமும், ஆசிரியர்களிடமும் பகிரப்பட்டதோடு மாணவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டன

## சிங்கள மொழித்தினப் போட்டி வெற்றியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை வலயத்தில்



(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலய மட்டத்தில் இடம்பெற்ற இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்) போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு வலய சிங்களப் பாடத்திற்கான வளவாளர் ஏ.எச். நாஸிக் அஹ்மத் தலைமையில் இன்று புதன்கிழமை நடைபெற்றது.

சிங்கள மொழிதினப் போட்டியில் பேச்சு, வாசிப்பு, மொழிப்பிரயோகமும் கிரகித்தலும் மற்றும் நாட்டார் குழுப்பாடல் போன்ற போட்டிகளில் பங்குபற்றி முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.எம்.எம்.எஸ் உமர் மௌலானா பிரதம அதிதியாக கலந்து கொண்டு மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் சம்மாந்துறை வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்வி பணிப்பாளர் (நிர்வாகம்) பீ.எம். வை.அரபாத் , பிரதிக் கல்வி பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி) ஏ.எல்.அப்துல் மஜீது , பிரதிக்கல்வி பணிப்பாளர் (திட்டமிடல்) ஏ.சி.நுஸ்ரத் நிலோபரா, சம்மாந்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.நசீர் , நாவிதன் வெளி கோட்டக் கல்விப் பணிப்பாளர் பீ.பரமதயாளன் மற்றும் சம்மாந்துறை வலயக்கல்வி அதிகாரிகளும், ஆசிரியர்களும் மாணவர்களும் பங்குபற்றினார்கள்.

## அக்கரைப்பற்று கல்வி வலய பாடசாலைகளில் அட்டாளைச்சேனை ஸஹ்ரா வித்தியாலயம் க.பொ.த சா. தரப் பெறுபேறுகளில் முன்னிலை

(கே.எ.ஹமீட்)

அக்கரைப்பற்று கல்வி வலயத்தில் க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 25 பாடசாலைகளில், ஸஹ்ரா வித்தியாலயம் இந்த அடைவைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸஹ்ரா வித்தியாலயத்திலிருந்து 2022ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய 25 மாணவர்களில் - அனைவரும் (100 சதவீதம்) சித்தியடைந்து, உயர்தரம் கற்பதற்கான தகுதியினைப் பெற்றுள்ளனர்.

2018ஆம் ஆண்டிலிருந்தே - இந்தப் பாடசாலையிலிருந்து க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றி வருகின்றனர்.

இதன்படி அந்த ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் 88.7 சதவீதமான மாணவர்கள் சித்தியடைந்தனர். 2019 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் 100 சதவீதமானோர் சித்திபெற்றனர்.

2021ஆம் ஆண்டு 88.88 சத வீதமானோரும், இறுதியாக நடைபெற்ற 20222ஆம் ஆண்டுப் பரீட்சையில் 100 சதவீதமானோரும் சித்திடைந்துள்ளனர்.

பல்வேறு குறைபாடுகள் மற்றும் தேவைகளுடன் இயங்கி வரும் ஸஹ்ரா வித்தியாலயத்தின் உயர்வுக்காக - அதிபர் எம்.எஸ்.எம். பைறூஸ், அங்குள்ள ஆசிரியர் குழாத்தினருடன் இணைந்து மிகவும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றார்.

இவரின் காலத்தில்தான் ஸஹ்ரா வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரம் ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## குச்சவெளியில் மனித உரிமை வாரம் அனுஷ்டிக்கப்படுகிறது



(ஹஸ்பர்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஏஎச்ஆர்சி நிறுவனத்தின் ஏற்பாட்டில் குச்சவெளி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிவில் அமைப்பினரினால் குச்சவெளி பிரதேச சபை மண்டபத்தில் இன்று புதன்கிழமை காலை மனித உரிமைகள் தின வாரத்தை முன்னிட்டு மனித உரிமை சார்ந்த நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தன.

குறித்த நிகழ்வில் சிவில் செயற்பாட்டாளர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள், அயல் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் மற்றும் ஏஎச்ஆர்சி நிறுவன உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்திருந்தனர்.

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு ஏஎச்ஆர்சி நிறுவன சிவில் செயற்பாட்டாளர்களினால் டிசம்பர் 4 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை மனித உரிமைகள் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# மழைக்காலத்தில் டெங்கு பரவுவதைத் தடுக்கத தேவையான நடவடிக்கை எடுக்க ஜனாதிபதியின் ஆலோசகர் வலியுறுத்து!

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையை கருத்தில் கொண்டு டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது தொடர்பில் கவலை வெளியிட்டுள்ள ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் தலைமை அதிகாரியுமான சாகல ரத்னாயக்க, அதிகரித்து வரும் நிலைமையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக அமுல்படுத்துமாறு அனைத்துத் திணைக்களங்களையும் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் சுகாதார இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சீதா அரம்பேபொல மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோர் தலைமையில் நேற்றையதினம் ஜனாதிபதி செயலகத்தில் கூட்டமொன்று இடம்பெற்றது.

இதன்போது சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவுக்கு, சாகல ரத்னாயக்க அறிவுறுத்தல்களை வழங்கினார்.

கொழும்பு, கம்பஹா, கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசு நிறுவனங்கள், படகுத்தளங்கள் மற்றும் பள்ளிகள் போன்ற பொது இடங்களிலும் டெங் குக் கிருமியின் இனப்பெருக்கம் அதிகமாக இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்த ரத்நாயக்க, நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இலங்கை காவல்துறைக்கு அறிவுறுத்தினார்.

மேலும், நாடளாவிய ரீதியில் விரிவான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை காவல்துறை மற்றும் சுகாதார வைத்திய அதிகாரிகளின் அலுவலகங்களுக்கு இடையில் கூட்டு முயற்சியை மேற்கொள்ளவும் ரத்நாயக்க இதன்போது ஆலோசனை வழங்கினார்.

இந்த முயற்சிகளின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவுடனான தொடர் கூட்டம் எதிர்வரும் 11ஆம் திகதி திட்டமிடப்பட்டுள்ளது. இதேவேளை,பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நாயகம் கமல் குணரத்ன, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் சுகாதார அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் கொழும்பு மாநகர சபையின் சிரேஷ்ட அதிகாரிகள் என பலரும் குறித்த சந்திப்பில் கலந்துகொண்டனர். (த)

# வடமாகாணத்தின் பண்பாட்டுப் பெருவிழாவும் பண்பாட்டியல் காண்பியக்கூடக் கண்காட்சியும்







வடமாகாணப் பண்பாட்டுப் பெருவிழாவும் பண்பாட்டியல் காண்பியக் கூடக் கண்காட்சியும் கிளிநொச்சியில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

அனைத்து சர்வ மதப் பண்புகள் தமிழ், சிங்கள, இஸ்லாமிய, கிறிஸ்தவ பண்புகளை வெளிப்படுத்தும் வகையில் சிலம்பாட்டம், பொம்மலாட்டம், கோலாட்டம், மயிலாட்டம், தமிழ் இன்னியம் உள்ளிட்ட அம்சங்கள் தாங்கியவாறு வாகன ஊர்தி பேரணி கிளிநொச்சி ஏ9 வீதி கரடிப்போக்குச் சந்தியில் ஆரம்பமாகி, விழா பிரத்தியோகமாக அமைக்கப்பட்ட பண்பாட்டியல் காண்பியக் கூடக் கண்காட்சியும் திறந்துவைக்கப்பட்டது.

இதில் தொல்லியல் தொடர்பான பொருட்கள், புகைப் படங்கள், ஓவியங்கள், புத்தகங்கள் என்பவற்றை திறந்து வைத்த பின்னர் கூட்டுறவு மண்டபத்தை வந்தடைந்தவுடன் அங்கு அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக்நிரஞ்சன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் ஆகியோர்கள் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சிறப்பம்சமாகும். மற்றும் அரச அதிகாரிகள், கலைஞர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (02)








## பழைய மாணவர்களால் மின்விசிறிகள் அன்பளிப்பு

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி திகழி முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் திருத்தியமைக் கப்பட்டுள்ள பிரதான மண்டபத்திற்கு 18 மின்விசிறிகளினதும் மற்றும் 250 பிளாஸ்டிக் கதிரைகளினதும் தேவைப்பாடு காணப்படுகின்றது.

நிலையில் முதற் கட்டமாக பாடசாலையின் 98 உயர்தர வகுப்பு பழைய மாணவர்கள் குழு வினால் இரண்டு மின்விசிறி கள் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

அவை, அதிபர் அலுவலகத்தில் 98 உயர்தர பழைய மாணவர் களால் அதிபர் எம்.ஐ.எம்.ஏ றஸ்ஸாக் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

பாடசாலையின் அபிவிருத்தி யில் பழைய மாணவர்களின் பங்கு இன்றியமையாதது. இவ்வாறான முன்னுதாரணச் செயற்பாடுகளை அதிபர் என்ற ரீதியில் தான் வரவேற் பதாகவும், பாடசாலை சார்பாக தமது நன்றிகளையும் பழைய மாண வர்களுக்கு தெரிவிப்பதாகவும் குறிப் பிட்டார்.

## பெற்றோர் கண்டித்ததையடுத்து தவறான முடிவெடுத்த மாணவி!

வெளியாகிய கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மாணவி ஒருவர் குறைவான பெறு பேற்றினை பெற்றதாக தெரிவித்து, பெற்றோர் குறித்த மாணவியை கண்டித்த நிலையில் அவர் தவறான முடிவெடுத்து உயிர்மாய்த்துள்ளார்.

யாழ்ப்பாணம் அராலி கிழக்கி னைச் சேர்ந்த சிவகுமார் பானுப்பி ரியா என்ற 17 வயதான மாணவியே தவறான முடிவெடுத்து இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி நேற்று 11 மணியளவில் வீட்டில் தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரணவிசா ரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங் கம் மேற்கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் அவரது சடலம் உறவினர் களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (த)

## உப பொலிஸ் பரிசோதகர் தற்கொலை

பேலியகொட அதிவேக நெடுஞ் சாலையில் நேற்றிரவு கடமையாற் றிய உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தனது கடமை நேரத் துப்பாக்கியால் தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டதாகவும், இச்சம்ப வம் இன்று (06) காலை 6.30 க்கும் 7 மணிக்குமிடையே இடம்பெற் றுள்ளதாகவும், உயிரிழந்த உப பொலிஸ் பரிசோதகருக்கு 54 வயது இருக்கும் எனவும் பொலிஸ் ஊட கப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத் யட்சகர் நிஹால் தல்துவ தெரிவித் துள்ளார். (ரெதி-02)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.12.2023இல் வெளியிடப்பெற்றது.